திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: செ.சரவணன், இ.ஆ.ப.,

ந.க.எண். 1643 /2023/பேரூ2.

நாள்:07.03.2025

பொருள்:- நேரடி நியமனம்— தமிழ்நாடு அமைச்சுப்பணி— தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2020–2021ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வு – இளநிலை உதவியாளர் (பிணையமற்ற) / வரித்தண்டலர் (பிணையம்) உள்ளிட்ட தொகுதி 4ல் அடங்கிய பணிகள் – திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு – தேர்வாளர் விபரம் அனுப்பி வைக்கப்பட்டது – திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:- 1. சென்னை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் செயலாளர் கடிதம் எண்.1880/பிஎஸ்டி– B1/2023 நாள். 10.08.2023.

2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1643/2023/பேரூ2 நாள். 07.09.2023

3. தொடர்புடைய ஆவணங்கள்

*****

**ஆணை:–**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் 2020–2021ம் ஆண்டிற்கு 24.07.2022ம் தேதி நடத்தப்பட்ட தொகுதி 4ல் இளநிலை உதவியாளர் (பிணையமற்ற) / வரித்தண்டலர் (பிணையம்) உள்ளடங்கிய பணிகளுக்கான போட்டித் தேர்வில் தேர்வு பெற்ற 6 நபர்கள் திண்டுக்கல் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்து பணியிட நியமன ஆணை வழங்க பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, தேர்வாணைய கடிதத்திற்கிணங்க, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பார்வை–2ல் காணும் செயல்முறைகளின்படி தனியர்கள் பின்வரும் விபரப்படி பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் 2020–2021ம் ஆண்டில் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு தனியர்கள் பணியில் இணைந்த நாளான கலம் 5–ல் காணும் நாள் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி மற்றும் பணி நியமனம் செய்யப்பட்ட அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைபடுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வி. பெருமாள் | வரித்தண்டலர்,<br>வடமதுரை பேரூராட்சி. | 14.09.2023பி.ப | 14.09.2023பி.ப |
| 2 | எ.கே. சஞ்சிதாமேரி | இளநிலை உதவியாளர்,<br>அய்யம்பாளையம் பேரூராட்சி. | 14.09.2023பி.ப | 14.09.2023பி.ப |
| 3 | பி. சங்கீதா | வரித்தண்டலர்,<br>பட்டிவீரன்பட்டி பேரூராட்சி. | 15.09.2023பி.ப | 15.09.2023பி.ப |

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி மற்றும் பணி நியமனம் செய்யப்பட்ட அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைபடுத் திய நாள் |
|---|---|---|---|---|
| 4 | டி. சுசி | வரித்தண்டலர், ஆயக்குடி பேரூராட்சி. | 20.09.2023 மு.ப | 20.09.2023 மு.ப |
| 5 | கே. முகமது யாசீர் | வரித்தண்டலர், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி. | 15.09.2023 மு.ப | 15.09.2023 மு.ப |

மேலும் தனியர்களின் பணிபதிவேட்டில் இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகளை மேற்கொள்ளவும், பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பதிவேட்டின் நகலினை அனுப்பிட சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திண்டுக்கல் மாவட்டம்.

07/03/2025

பெறுநர்

1. திரு.வி.பெருமாள்,
வரித்தண்டலர், வடமதுரை பேரூராட்சி.
2. திருமதி.எ.கே.சஞ்சிதாமேரி,
இளநிலை உதவியாளர், அய்யம்பாளையம் பேரூராட்சி.
3. திருமதி.பி.சங்கீதா,
வரித்தண்டலர், பட்டிவீரன்பட்டி பேரூராட்சி.
4. திருமதி.டி.சுசி,
வரித்தண்டலர், ஆயக்குடி பேரூராட்சி.
5. திரு.கே.முகமது யாசீர்,
வரித்தண்டலர், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி.
(செயல் அலுவலர்கள் மூலமாக)

நகல்:– 1) பேரூராட்சிகளின் ஆணையர், நகர்நிர்வாக அலுவலக வளாகம், சென்னை – 28.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை –2.
3) செயல் அலுவலர், வடமதுரை பேரூராட்சி, அய்யம்பாளையம் பேரூராட்சி, பட்டிவீரன்பட்டி பேரூராட்சி, ஆயக்குடி பேரூராட்சி, மற்றும் நெய்க்காரப்பட்டி பேரூராட்சி.